# அத்தியாயம் 12
# தேசப்படமொன்றின் அடிப்படை மூலகங்கள்

தேசப்படம் என்றால் என்ன? அது பற்றிய பல்வேறு வரைவிலக்கணங்கள் சில பின்வருமாறு.

- ❖ புவி மேற்பரப்பில் மிகவும் பெரிய அளவான நாடுகளில் அறிந்துக் கொள்ளக்கூடிய அம்சங்களைப் பொருத்தமான அளவுத்திட்டத்திற்கு ஏற்ப சிறுப்பித்துக் காட்டும் உபகரணமாகும். - ஜே.எம்.ஜேம்ஸ் -

- ❖ தேசப்படம் என்பது புவியில் காணப்படும் பௌதிக பண்பாட்டு அம்சங்களை கடதாசியில் பொருத்தமான அளவுத்திட்டங்களுக்கேற்ப முன்வைத்தல் ஆகும்.
  - பிரயோக புவியியல் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் -

- ❖ 'புவி மேற்பரப்பில் காணப்படுகின்ற முப்பரிமாண வடிவில் அமைந்துள்ள பௌதிக, பண்பாட்டு அம்சங்களை பொருத்தமானதோர் அளவுத்திட்டத்தின் அடிப்படையில் இருபரிமாண வடிவில் கடதாசி ஒன்றில் வரைகின்ற படமே தேசப்படம்'' ஆகும். அர்வின் றேஸ்

இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ள வரைவிலக்கணங்களிலுள்ள விடையங்களைத் தொகுத்துப் பார்க்கும் போது தேசப்படம் பற்றி விளங்கிக் கொள்ளக்கூடிய அடிப்படை அம்சங்கள் பல உள்ளன.


## தேசப்படங்களின் அடிப்படை மூலகங்கள்

- ❑ அமைவிடம்
- ❑ தலைப்பு
- ❑ அளவுத்திட்டம்
- ❑ குறியீடுகள்
- ❑ படக்குறி விளக்கம்
- ❑ எழுத்திடும் முறை
- ❑ திசை கோள்


12.1 உருவத்தில் மேலே தரப்பட்டுள்ள அடிப்படை அம்சங்கள் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. அவற்றை நன்றாக விளக்கி அறிந்து கொள்ளுங்கள்.

### ▸▸ அமைவிடம்

ஒரு பிரதேசம் அல்லது ஒரு நாட்டின் அமைவிடத்தை அகலாங்கு, நெட்டாங்குகளுக்கமைய மிகத் திருத்தமாக அறிந்து கொள்ளலாம். இலங்கையின் அமைவிடம் கிழக்கு நெட்டாங்கு $79^0 42$, $81^0 52$ க்கும் வடஅகலாங்கு $5^0 55$- $9^0 51$ க்கும் இடையில் அமைந்துள்ளது. (அகல, நெட்டாங்கினது பெறுமதி பாகை கலையில் காட்டப்பட்டுள்ளது. அறுபது கலை ஒரு பாகையாகும். பாகை [o] அடையாளமாகவும், கலை [ , ] அடையாளமாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது.) தேசப்படப்புத்தகத்தில் அதிகமான தேசப்படங்களின் அமைவிடம் அகலாங்கு நெட்டாங் குகளுக்கமைய காட்டப்பட்டுள்ளது. அதனால் அந்த நாடு உலகத்தில் எந்த பிரதேசத்தில் அமைந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும். (தேசப்படம் 12.1)




தேசப்படம் 12.1 தேசப்படத்தின் அமைவிடம்




දேசப்படம் 12.2
தேசப்படத்தின் அடிப்படை அம்சங்கள்

## ⏩ தலைப்பு

தேசப்படத்தில் அடங்கியுள்ள தகவல்களை வெளிப்படுத்தலே தலைப்பு ஆகும். இங்கு விசேட தகவல்கள் வெளிப்படுத்தப்படும். அதனால் தேசப்படத்தில் அடங்கியுள்ள தகவல்களைக் கொண்டு தலைப்பு ஒன்றையிடுதல் வேண்டும். இதனை தேசப்படத்தின் பெயர் எனவும் கூறலாம் உ-ம் தேசப்படம் 12.3 அது இலங்கையின் சனத்தொகை அடர்த்தி 1981 ஆகும். எனவே இத்தேசப்படத்தின் பெயர் தலைப்பு ஆகின்றது. சகல தேசப்படங்களுக்கும் தலைப்பு அவசியம்.




தேசப்படம் 12.3 தேசப்படத்தின் தன்மை

## ⏩ அளவுத்திட்டம்

தேசப்படமானது ஓர் அளவுத்திட்டத்திற்கு அமையவே வரையப்படுகின்றது. தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தின் தூரம், உண்மையில் நிலத்தில் எவ்வளவு தூரத்தைக் குறித்து நிற்கின்றது என்பதைத் தீர்மானிப்பது அளவுத்திட்டத்தின் அடிப்படையிலாகும்.

உ - ம் 2 சென்றிமீற்றர் சமன் 1 கிலோமீற்றர் என்பதில் விளங்கிக் கொள்வது தேசப்படத்தில் 2 சென்ரிமீற்றர் தூரம் நிலப்பரப்பில் 1கிலோ மீற்றர் தூரத்தைக் குறித்து நிற்பதாகும்.

### அளவுத்திட்டத்தில் காணப்படும் முறைகள்

**1. நேர்கோட்டு அளவுத்திட்டம்**

தேசப்படத்திற்கும் நிலத்திற்கும் இடையிலான தொடர்பை எளியமுறையில் சமமாக பிரிக்கும் நேர்கோடு ஒன்றினால் காட்டுவதே நேர்கோட்டு அளவுத்திட்டமாகும். இது தேர்ந்தெடுக்கப்பட்ட அளவுத்திட்டத்திற்கமைய பல்வேறு வகைப்படும்.

உ-ம் :-




இங்கு தேசப்படத்தில் 2cm நிலபரப்பில் 1km காட்டப்பட்டும்.

உ-ம் :- (B)




இவை சிறுப்பிக்கப்பட்ட நேர்கோட்டு அளவுத் திட்டங்களாகும். இந்த நேர்கோட்டு அளவுத்திட்டங்களும் முறையே 2cm இல் 5 km உம், 2 cm இல் 50 km உம் காட்டப்பட்டுள்ளது.

**2. (பின்ன அளவுத்திட்டம்)**

உ - ம் :- $\frac{1}{50,000}$ பூமிக்கும் தேசப்படத்திற்கும் இடையிலான தொடர்பு பின்னத்தில் காட்டப்பட்டுள்ளது. தேசப்படத்தில் ஒரு பகுதியானது புவியின் மேற்பரப்பில் அது போன்று 50,000 பகுதிகளுக்குச் சமனாகும். என்பதையே இது குறிக்கின்றது.

**3. விகித அளவுத்திட்டம்**

உ - ம்:- 1 :50,000 கூறப்படுவது

இதில் தேசப்படத்தின் ஒரு பகுதி புவி மேற்பரப்பில் 50,000 மேற்பரப்புகளுக்குச் சமனாகும் என்பதேயாகும். இதனை பல்வேறு அளவுத்திட்டங்களில் குறித்துக் காட்டலாம்.

| | | |
|---|---|---|
| சிறிய அளவுத்திட்டம் | 1 : 500, 000 | 1 : 250, 000 |
| நடுத்தர அளவுத்திட்டம் | 1 : 50, 000 | 1 : 25, 000 |
| பெரிய அளவுத்திட்டம் | 1 : 10, 000 | 1 : 500 |

ஆகிய விகிதங்களாகும்.

4. **கூற்று அளவுத்திட்டம்**

இது தேசப்படம் வரையப்பட்டுள்ள அளவுத்திட்டத்தை சொற்களில் எழுதலாகும்.
உ - ம் : இரண்டு சென்றி மீற்றர்கள் ஒரு கிலோ மீற்றர் என்பதாகும்.

## குறியீடுகள்

பிரதான போக்குவரத்து, வீதிகள், விகாரை, கட்டிடங்கள், பாலம், பயிர்கள் என்பன சுருக்கமான முறையில் தேசப்படத்தில் காட்டப்படுகின்றது. ஒன்றன் வடிவமைப்பை எடுத்துக் காட்டும் அடையாளமே குறியீடுகளாகும்.


உ-ம்:- பௌத்த விகாரை
கிறிஸ்தவ தேவாலயம்
சுற்றுலா விடுதி



என்பன

தேசப்படம் ஒன்றில் பல்வேறு வகையான புவியியல் அம்சங்கள் காட்டப்படுகின்றன. இத்தகைய விபரங்கள் புள்ளி உருவக் குறியீடுகள், கோட்டுக் குறியீடுகள், பரப்பியல் உருவக் குறியிடுகள் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றன.

இலங்கையில் 1: 50,000 தேசப்படத்தில் குறிக்கப்பட்டுள்ள குறியீடுகள் சில 12.1 உருவத்தில் குறிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.





உரு 12.1
இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படத்தில் பாவிக்கப்படும் குறியீடுகள்

இந்தக் குறியீடுகளில் குறிப்பிட்ட அமைப்பு, நிறங்கள், அளவு உள்ளன. அதனைப்பற்றி நன்கு புரிந்து கொள்ள வேண்டும். தேசப்படக்கல்வியில் குறியீடுகள் சம்பந்தமான அறிவு இன்றியமையாதது.

## படக்குறி விளக்கம்

தேசப்படத்தில் பயன்படுத்தும் குறியீடுகள், நிறங்கள் ஆகியவற்றின் மூலம் காட்டப்படுவது யாது என்பது பற்றி விளக்கமாக அறிந்து கொள்ள படக்குறி விளக்கம் அவசியமாகும். அதன் கருத்து யாதெனில் குறியீடுகள் மூலம் காட்டப்படுபவை எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

உரு 12.2 இல் இதனைப் புரிந்து கொள்ளலாம். தேசப்படப் புத்தகத்தை ஆராய்வதன் மூலம் அறிவை வளர்த்துக் கொள்ளவும்.




உரு 12.2
தேசப்படத்தில் படக் குறிவிளக்கம் பயன் படுத்தியுள்ள முறை


## எழுத்திடும் முறை

தேசப்படமொன்றில் காட்டப்பட்டுள்ள தகவல்கள், அதிகமானவை எழுத்தில் காட்டப்பட்டுள்ளன. தேசப்படத்தில் எழுத்திடும் போது அவதானமாகச் செய்ய வேண்டும். அளவினை விடப் பெரிதாகவோ, முறை தவறியோ எழுத்திடுவதனால் தேசப்படத்தில் முக்கியமான தகவல்கள் விளக்கமாக இருக்காது. தேசப்படமொன்றில் எழுத்திடும் ஒழுங்கில் நுட்ப முறைகள் அதிகம் உண்டு.

உ-ம்-
- மலைத்தொடர் ஒன்றின் பெயர் அம்மலைத் தொடரின் நீளத்திற்கே எழுத வேண்டும்.
- நதியாயின், நதியின் நீளத்தில் நீல நிறத்தில் எழுத வேண்டும்.
- எல்லைகள் காண்பிக்கப்படும் போது எல்லைக் கோட்டின் நீளத்திற்கு பெயர் எழுத வேண்டும்.
- நகரமாயின் குறுக்காக எழுத வேண்டும்.
- நாடு, பிரதேசம், இடம் என்பவற்றின் பெயரைக் குறிப்பிடும் போது எழுத்துக்கள் பெரிதாகவும் ஒழுங்காகவும் இருக்க வேண்டும்.

இலக்கம் 12.4 12.5 ஆகிய தேசப்பட பகுதிகளில் தமிழ், ஆங்கில மொழி மூல தேசப்படம் இரண்டிலும் எழுத்திடும் முறைகள் காட்டப்பட்டுள்ளன. அதனை நன்றாக கற்று எழுத்திடும் முறைகளை விளங்கிக் கொள்ளவும். தேசப்படப்புத்தகத்தையும், சுவர் தேசப்படத்தினையும் கற்று உங்கள் அறிவை விருத்தி செய்து கொள்ளலாம்.

தமிழ் மொழி மூலப்படங்களில் எழுத்திடும் முறை





தேசப்படம் 12.4




தேசப்படம் 12.5
ஆங்கில மொழிமூலப் படங்களில் எழுத்திடும் முறை

## திசைக்கோள்

தேசப்படத்திலே, திசையானது பிரதேசத்தின் அமைவிடத்தை விளக்கிக்கொள்வதற்கு உறுதுணை புரியும். சகல தேசப்படமும் பிழையின்றி அமைவதற்கு திசை காட்டப்பட வேண்டும். அது அத்தியாவசியமாகும். பொதுவாக தேசப்படத்தில் வடக்குத் திசை மட்டுமே குறிப்பிடப்படுகின்றது. அதிகமாக வடதிசை காட்டப்படுவது அம்புக்குறியினாலாகும். அகலாங்கு நெட்டாங்கு காட்டப்படும் தேசப்படங்களில் வடக்குத் திசையை காட்டுவதற்கு அகலாங்கு நெட்டாங்கு அம்புக்குறி இல்லாது விட்டாலும் திசை சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்ளலாம். அது எவ்வாறெனில் அகலாங்குகள், நெட்டாங்குகள் வடக்கு தெற்காகவும் கிழக்கு மேற்காகவும் வரையப்பட்டிருப்பதாலாகும். உரு 12.3 இல் தேசப்படத்தில் வழக்கமாகக் குறிக்கப்படும் மூன்று வகை திசைகளும் காட்டப்பட்டுள்ளது.




True North (TN) உண்மை வடக்கு
Magnatic North (MN)காந்த வடக்கு
Grid North (GN) அளியடைப்பு வடக்கு

உரு 12.3

**செயற்பாடு 1**

- இலங்கைப் புறவுருவத் தேசப்படத்தில் பின்வருவனவற்றை பொருத்தமான குறியீடுகள் மூலம் குறித்துப் பெயரிடுங்கள். அது சம்பந்தமான படக்குறி விளக்கமொன்று தருக.
  - கட்டுநாயக்கா, இரத்மலானை, மத்தல விமானநிலையங்கள்
  - கொழும்பு, காலி, திருகோணமலை துறைமுகம்
  - அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி, வரலாற்று இடங்கள்
  - றம்பொட, கினிகத்தேன, இங்கினியாகல, நன்னீர் மீன் வளர்க்கும் இடங்கள்
  - வில்பத்து, உடவளவை, யால, மாதுறு ஓயா, புகலரண்கள்
- தேசப்படம் சம்மந்தமான பொருத்தமான தலைப்பை இடுக.
- தேசப்படப்புத்தகத்தைப் பயன்படுத்தி அத்தேசப்படத்தின் இடவிளக்கப் பெயர், மலை, நதி, நாடுகள் ஆகியனவற்றை அறிந்து கொள்வதற்காக காட்டப்பட்டுள்ள விளக்கக்குறியீடுகளைக் கற்றுப் பயன்படுத்தப் பழகுங்கள்.
- குணசேன, பிலிப் உலக தேசப்படத்தில் உலக தேசப்பட படக்குறி விளக்கத்தைப் பயன்படுத்தி பின்வரும் நகரம் காட்டப்பட்டுள்ள முறைப்படி உங்கள் புத்தகத்தில் குறிப்பிடுங்கள். உ - ம் ஆக்ரா - இந்தியா 23 F 6

| | | | |
|---|---|---|---|
| அஜந்தா | ............. | இஸ்லாமாபாத் | ............. |
| நியூயோர்க் | ............. | பரிஸ் | ............. |
| மெல்போர்ன் | ............. | டோக்கியோ | ............. |
| லெனின் கிராட் | ............. | கெய்ரோ | ............. |
| சியாட்டல் | ............. | ரியோடி ஜெனீரோ | ............. |

## 1:50,000 தேசப்படத்தின் அம்சங்கள்

1:50,000 தேசப்படத்தை கற்கும் போது பின்வரும் தகவல்கள் சம்மந்தமாக கவனம் செலுத்த வேண்டும். கற்றலுக்கு இலகுவாக தேசப்படத்தின் முக்கிய அம்சங்கள் இரண்டாக வகைப்படுத்தியுள்ளார்கள்.

01) முகப்பு விபரங்கள்

(தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்கள்)

02) அடிப்படை அம்சங்கள் (பட மூலங்கள்)

(தேசப்படத்தை படித்து விளங்கிக் கொள்ளுவதற்கான எளிய தகவல்கள்)

பௌதிக பண்பாட்டு அம்சங்கள்

01) நிலத்தில் உள்ள பௌதிக பண்புகள். (உதாரணம்.)

(கடல், ஆறு, மலை, மணற்றொடர், காடு, முட்புதர்)

02) பண்பாட்டு அம்சங்கள்

(மனிதனால் உருவாக்கப்பட்டவை உ - ம் குடியிருப்பு, வீதி, பயிர்நிலம், கட்டிடங்கள்)

வட்டக்கரை தகவல்களை இரண்டாக வகைப்படுத்தலாம்.


மேல் வட்டக்கரை

- தேசப்பட வகைகள்
- தேசப்பட பெயர்
- தேசப்பட இலக்கம்

கீழ் வட்டக்கரை

- தேசப்பட எல்லை
- சமவுயரக் கோட்டின் வேறுப்பாடு
- குறியீட்டிலக்கம்
- தேசப்படம் வரைந்த நிறுவனம்

பாடசாலையில் உள்ள 1:50,000 படத்தினை கற்பதன் மூலம் பின்வரும் தகவல்கள் காட்டப்பட்டுள்ள முறையை அவதானிக்கவும்.




உரு 12.4